REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 12உ வியாழன் (28—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 13உ வெள்ளி (29—7—55) [இதழ் 38

## தொழிலாளர்களுக்கு 1,08,84,000 ரூபாய் 'போனஸ்' வழங்கப்படும்!

ஜாம்ஷெட்பூரிலுள்ள டாடா இரும்பு, எஃகுக் கம்பெனியார், கம்பெனியில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு 1954—'55-ம் ஆண்டிற்கான இலாபப் பங்கீட்டுப் போனஸ் தொகையாக ரூ. 1,08,84,000 தருவதற்கு ஒப்புதல் தந்துள்ளனராம்.

இதில் மூன்றில் ஒரு பங்குத் தொகை ஒவ்வொரு சிப்பந்தியின் கணக்கிலும் 'டெபாசிட்' செய்யப்படுமாம்.

# 'கிழக்கு ஆப்ரிக்கா—வட இந்தியர் வேட்டைக்காடு'

## 'சுரண்டுவதில் வெள்ளையர்களும் இந்தியர்களும் ஒன்றே'

## 'உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்குவதில் இந்திய இளைஞர்கள் தீவிரம்'

### படேலின் பித்தலாட்டத்திற்கு ஆதாரபூர்வமான மறுப்பு

"தகுதியும், பெரும் பணமும் படைத்த (வட) இந்திய வியாபாரிகளுக்கு எதிராக ஒரு பக்கத்திலும், அன்னிய அரசாங்கம் விதித்துள்ள ஓரவஞ்சனை சட்டங்களுக்கு எதிராக மற்றொரு பக்கத்திலும், ஆப்பிரிக்க வியாபாரி நீண்டகாலமாகப் போரிட வேண்டி இருந்தது."

"இந்திய குடியேற்றக்காரர்களால் உரிமையாக்கிக்கொள்ளப்பட்டுள்ள (கி. ஆப்பிரிக்கா) பகுதிகள், அங்குள்ள ஆதிகுடிகளுக்குச் சொந்தமானதேயாகும்."

"இந்திய வியாபாரிகளாலும், அரசாங்கத்தாலும் ஆப்பிரிக்க வியாபாரி மேலும் மேலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டான்; அதன் விளைவாக, தொழில் துறை, வர்த்தகத் துறை ஆகியவற்றில் 75 சத விகித ஆதிக்கம் இந்திய வியாபாரிகளிடமே இருந்து வருகிறது."

"ஆப்பிரிக்கர்களுடைய நியாயமான விருப்பங்களுக்கு அங்குள்ள இந்தியர்கள் அனுதாபிகளாக இருக்கவில்லை என்பதற்கு, கெனியாவாழ் இந்தியர்களின் நடத்தையே தக்கதோர் எடுத்துக்காட்டாகும்."

"சட்டம், ஒழுங்கு, உடைமை ஆகியவைகளைக் காப்பதை ஓர் புகலாகக் கூறிக்கொண்டு, அங்குள்ள வெள்ளையர்களுடன் இந்தியர்கள் ஒத்துழைக்கத் தயங்குவது கிடையாது."

"பாதுகாப்புப் படையில் பல இந்திய இளைஞர்கள் இடம் பெற்று இருக்கும் ஒன்றிலிருந்தே, இவ்வுண்மையை உணர்ந்துகொள்ளக்கூடும்."

கிழக்கு ஆப்பிரிக்காவில் குடியேறியுள்ள (வட) இந்தியர்கள் அங்குள்ள ஆப்பிரிக்க மக்களிடம் எப்படி நடந்துகொண்டு வருகின்றனர்—ஆப்பிரிக்கர்களை ஒடுக்குவதில், வெள்ளையர்களுடன் அவர்கள் எப்படி ஒத்துழைத்து வருகின்றனர்—தொழில் துறையில் தாங்கள் எப்படி ஆதிக்கம் பெற்றுள்ளனர்—என்ற உண்மை நிகழ்ச்சிகளை, திரித்துக் கூறும் பெரும் பணியில் பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. படேல், சில நாட்களாக ஈடுபட்டு வருகிறார்; அவருடைய கூற்று எத்தகைய பித்தலாட்டமாக இருக்கிறது என்பதை விளக்கும் வகையில், டெல்லியிலிருக்கும் கெடோங்கா நாகிடியா என்பார், பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழில் கடிதம் ஒன்று தீட்டியுள்ளார். அதன் உள்ளடக்கத்தில் சில, மேலே தரப்பட்டிருக்கின்றன.

அக்கடிதத்தின் முழு விவரம் வருமாறு:—

"இந்தியக் குடியேற்றக்காரர்கள் குடியேறியிருக்கும் பகுதிகள் எல்லாம், அங்குள்ள ஆதிகுடிகளின் சொத்துக்கள்தான்;

"இந்தியர்களைப்போலவேதான், ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவில் குடியேறிய வெள்ளை இனத்தவரும் தாங்கள் குடியேறிய பகுதிகள் பற்றி உரிமை கொண்டாடி வாதம் புரிகின்றனர்;

"இதிலிருந்து, இந்தியர், வெள்ளையர் ஆகிய இருசாராரும் கிழக்காப்பிரிக்காவில் குடியேறியிருப்பது தங்களின் சொந்த நலன் கருதியே என்பது தெளிவாகும்;

"இந்தக் குடியேற்றக்காரர்கள் உகாந்தாவில் எந்தவிதக் கிராமங்களையும் காணவில்லை என்பதினாலேயே, உகாந்தா எவருக்கும் சொந்தமாயிருக்கவில்லை என்பதாக ஆகாது;

"அந்நியர்களால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டிருக்கும் பகுதிகள், ஆப்பிரிக்கர்களுடையதல்ல என்று எவ்வளவுதான் கூச்சல் போட்டாலும், ஆப்பிரிக்கர்கள் திருப்தியடைந்துவிடமாட்டார்கள்;

"கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள், முதலில் ஆப்பிரிக்கர்கள்—பின்னர்தான், இந்தியர்கள்—என்று எஸ். கே. படேல் கூறுவது தவறானதாகும்; இது, இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்கள், முதலில் இந்தியர்கள்-பின்னர்தான் ஐரோப்பியர்கள்—என்று கூறுவதற்குச் சமமானதாக முடியும். இதை எந்த ஒரு ஆப்பிரிக்கரும் ஏற்றுக் கொள்வது என்பது ஆச்சரியம் தான்."

## 40,000 தேயிலை தொழிலாளர் வேலை நிறுத்தம்!

கல்கத்தா, ஜூலை 27—

"ஜல்பைகுரி மாவட்டத்திலிருக்கும் சுமார் 40 தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் 40,000 தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் பெற்ற தொழிற் சங்கம், வரும் ஆகஸ்டு 16-ந் தேதிக்குள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவிட்டால், அன்றிலிருந்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள்,"

என்று, தொழிற் சங்கம் தோட்ட நிர்வாகிகளுக்குத் தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## இந்தியா-பாக். வியாபார ஒப்பந்தம்

### 'மேற்கு வங்கத்திற்குச் சலுகை—கிழக்குப் பஞ்சாபிற்கு வஞ்சனை'

பஞ்சாப் வியாபாரச் சங்கத்தின் முறையீடு

அமிர்தசரஸ், ஜூலை 27—

இந்தியாவிற்கும்—பாகிஸ்தானுக்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வொப்பந்தத்தில், பாக். வங்காளத்திற்கும்—இந்திய வங்காளத்திற்கும் எல்லையோர வர்த்தகத் துறையில் சலுகை காட்டப்பட்டும், பஞ்சாப் எல்லையோர வியாபாரம் பற்றி வஞ்சிக்கப்பட்டும் இருப்பதாக, பஞ்சாப் வியாபார-தொழிற் சங்கம் குற்றஞ் சாட்டி கண்டித்திருக்கிறது.

பிரஸ்தாப வியாபார ஒப்பந்தம் குறிப்பிட்ட வரையறைக்குள் இரண்டு வங்காளத்தின் எல்லையோர வியாபாரத்திற்கு வழி செய்கிறது; அதனால், இந்தியாவின் கிழக்கு வட்டாரம் நலம் பெற இடமிருக்கிறது; அதுபோன்றே எல்லையோர வியாபார நலன்களை அடைய முடியாமல், இரண்டு பஞ்சாபும் அறவே புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது;

நீண்ட எல்லைக் கோடுகளைக் கொண்ட பஞ்சாபின் எல்லையோர வர்த்தகத்தை இரண்டு அரசாங்கங்களும் அலட்சியப்படுத்திவிட்டது ஆச்சரியமாக இருக்கிறது என்றும், மேற்கு பாகிஸ்தானில் உள்ள பகுதிகளின் பண்டங்களுக்கு, பல நூற்றாண்டுகளாக அமிர்தசரஸ், நுழைவு வாயிலாக இருந்து வந்திருக்கிறது. அத்தகு சிறப்புடைய பகுதிக்கு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுவது துளியும் பொருந்தாது என்றும், வியாபார சங்கத் தலைவர் சத்யபால் விர்மாணி குறிப்பிட்டுள்ளார்.

பெருத்த தொழில் பகுதியாக இருக்கிற பாகிஸ்தான் பஞ்சாபிற்கு பருத்தி, கம்பளி, செயற்கை துணி போன்ற பல பொருட்கள் தேவையாக உள்ளன என்றும், உணவுப் பொருள் வகையில்கூட ஒன்றுக்கு ஒன்று உதவி செய்வதின் மூலம் தங்களுக்கு ஏற்பட்டுள்ள தற்காலிக நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும், அந்தத் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 'ஐந்தாண்டுத் திட்ட சுவரொட்டியை ஒட்டாதே!'

போலீசார் கெடுபிடி!

ஈரோடு, ஜூலை 27—

26—7—55 இரவு, தோழர்கள் எஸ். அப்பாவு, எம். சின்னப்பன், கே. வீரகேசரி ஆகிய மூவரும், தி. மு. கழகத் தலைமை நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட 'தீண்டாமை ஒழிப்பு' சுவரொட்டிகளுடன் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்த 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன' சுவரொட்டிகளையும் எடுத்துக் கொண்டு, முக்கியமான இடங்களில் ஒட்டி வந்தார்கள்.

ஈரோடு வடக்கு போலீஸ் நிலயத்தில் உள்ள தலைமை போலீஸ்காரர் ஒருவர், அவர்களைத் தடுத்து, 'சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது; அப்படி ஒட்டினாலும், ஐந்தாண்டு திட்டக் கண்டன சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது;' என்று தடுத்தார்.

தோழர்கள், 'எங்கள் கடமையை நாங்கள் செய்கின்றோம்,' எனச் சொல்லி, ஒட்டிவிட்டுச் சென்றனர்.

போலீஸ் அதிகாரி, அவர்கள் பெயர்களை எழுதிக்கொண்டு சென்றுள்ளார்.

## ஆகஸ்டுப் போராட்டம் வாபஸ்!

### காலவரையறையின்றி ஒத்திப்போடப்படுகிறது

சென்னை, ஜூலை 28—

ஆந்திராவிற்கும்—சென்னை மாநிலத்திற்கும் இருந்துவரும் எல்லைத் தகராறைத் தீர்த்துவைக்க எல்லைக்குழு நியமனத்தை வலியுறுத்த, ஆகஸ்டு முதல் வாரத்தில் 'பெரும் போராட்டம்' நடத்தப்போவதாக, தமிழரசுக் கழகம் அறிவித்திருந்தது. இப்பொழுது அப்'பெரும் போராட்டம்' ஒத்திப் போடப்பட்டுவிட்டதாக, அதன் தலைவர் எனப்படுபவர், திருவல்லிக்கேணி வ. உ. சி. மன்ற சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு தாய்நாடு திரும்பியதைக் கண்ணியப்படுத்துவதற்காக எனக் காரணம் கூறி, அகாலியர் கிளர்ச்சிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பஞ்சாப் காங்கிரஸ் முதல் மந்திரி திரும்பப் பெற்றுக்கொண்டதுபோன்று, திராவிட கழகத்தின் 'கொடி எரிப்புப் போராட்டத்தை'க் காரணமாகக்கொண்டு, தமிழரசுக் கழகமும் தனது 'ஆகஸ்டு'ப் போராட்டத்தை வாபஸ் பெறப்போகிறதாம்!

இந்த 'வாபஸ்' படலத்தையும், அம்முடிவிற்கு வந்ததின் காரணத்தையும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

போராட்டம்பற்றிய நாள், பிறகு தீர்மானிக்கப்படுமாம்!

## தீண்டாமை ஒழிப்புப் 'போஸ்டர்' எதிரொலி!

### திருச்செந்தூரில் பார்ப்பனர் சீற்றம்!

சென்னை அரசியலார், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சார சுவரொட்டிகளை நிறுத்திக் கொண்டதை யொட்டி, தி. மு. கழகத் தலைமை நிலயம், அரசியலார் விடுத்த சுவரொட்டிகளைப் போன்ற விளக்கச் சுவரொட்டிகள் அச்சடித்து எல்லா கிளைக் கழகங்களுக்கும் அனுப்பியிருந்தது. கிளைக் கழகங்களும் அவற்றை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளன.

திருச்செந்தூரிலுமுள்ள கிளைக் கழகம், மேற்படி சுவரொட்டிகளை, கழகத்திற்குச் சொந்தமான தட்டிகளில் ஒட்டி, நகரில் சில குறிப்பிட்ட இடங்களில் வைத்திருந்தது. இந்தச் சுவரொட்டிகளைக் கண்ணுற்ற சில பார்ப்பனத் தோழர்கள், அத்தட்டிகளை அப்புறப்படுத்தி, சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்ததோடு, கண்டபடி ஏசி, பலாத்காரமான முறையில் கழகத் தோழர்களைத் தாக்கவும் முயற்சித்திருக்கின்றனர்.

எனவே, திருச்செந்தூர் கிளை தி. மு. கழகத்தவர், அங்குள்ள 'சங்கர் ஸ்டாலி'ன் உரிமையாளரான சங்கரன் ஐயர், மு. மாது ஐயர் ஆகியோர், சுவரொட்டிகளை அப்புறப்படுத்தித் தங்களைத் தாக்க வந்ததாகப் போலீசில் புகார் செய்துள்ளனர். (ச. - தி.)

## கடனுக்கு முதலீடு

சென்னை சர்க்கார் எழுப்ப இருக்கும் ரூ 7 கோடி கடனுக்கு தஞ்சை மாவட்டத்தில் உள்ள அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 15 லட்சம் முதலீடு செய்ய முடியுமென்று கூறப்பட்டிருக்கிறது.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—7—'55 வியாழன்


# 'அமுல் செய்வானேன்—அவதிப்படுவானேன்?'

'உலகத்தோரே — உறங்கியது போதும்; உதித்து விட்டேன் நான்; உலகம் உய்ய ஒளிக் கதிர்களைப் பரப்பிவிட்டேன் — விழித்தெழுங்கள்' என்று ஆதவன் கட்டளையிடு முன் எழுந்தது முதல், அவன், 'நான் அலுத்துவிட்டேன்—இந்த அகிலத்தை ஒளியால் அணைத்து மகிழ்ந்து—ஓய்வு பெறப்போகிறேன்' என்று கூறி, மலை வாயிலில் விழும் வரை உழைத்து அலுத்த மக்கள்—விவசாயத் தொழிலாளப் பாட்டாளிமக்கள் — மற்றும், 'வாழ்வுமில்லை — வாழாமலும் இல்லை' என்ற நிலையிலிருக்கும் நடுத்தர மக்கள் — உடம்பை ஓடாய்த் தேய்த்து உழைத்து, அந்த உழைப்பின் விளைவுகளைக் கொண்டு 'கால் பட்டினி - அரை வயிறு' என்று காலந்தள்ளும் நிலையிலிருக்கிறார்கள். ஏற்கனவே அவர்களது உழைப்பு சூறையாடப்படுகிறது — சுரண்டப்படுகிறது; உழைப்பினால் கிடைக்கும் ஊதியம் போதியதாயில்லை; அவர்கள் குடும்பம் வயிற்றைக் கழுவிக் கொள்ள முடியாமல் வாடுகிறது.

இவர்களது உழைப்பின் விளைவுகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை; இவர்கள் உழைப்பதற்காக ஊதியம் தருபவர்களை, இவர்களின் உழைப்பின் பலன்கள் உயர்த்துகின்றன.

இந்த நிலையில் சுரண்டப்படுபவராக இருக்கும் இந்த ஏழை எளிய மக்கள் கூட்டம், தங்கட்குக் கிடைக்கும் சிறு அளவு ஊதியத்தின் பெரும் பகுதியையும், வேண்டாத தீய பழக்கமான கள் குடிக்குச் செலவிடுவது கொடுமை; அவர்களைக் கள் குடிக்க அனுமதிப்பது அதனினும் கொடுமை; அவர்களைக் கள் குடிக்க அனுமதிப்பதற்கு வரி வாங்குவது, கொடுமையினுங் கொடுமை!

அது மட்டுமா?—அபரிமிதமான தன் உழைப்பை விற்றுப் பெற்ற பற்றாத ஊதியத்தைக் கொடுத்து கள் வாங்கிக் குடித்ததுடன் மட்டுமா நின்றுவிடுகிறார்கள்? குடித்ததினால் பெற்ற போதையில் உலகத்தை ஏசிப்பேசி, ஊராரோடும் உற்றாரோடும் வம்பையும் வழக்கையுமல்லவா விலை கொடுத்து வாங்கிக்கொள்கின்றனர்!

அது மட்டும்தானா? 'உள்ளதைக்கொண்டு நல்லதைச் செய்வோம்' என்று குடித்தனம் நடத்தும் குணவதிகளை, குடித்துவிட்டு வந்து அடித்துத் துன்புறுத்துவதும், ஆகாத வார்த்தைகளை அள்ளி வீசுவதையும்கூட பழக்கமாக்கிக் கொள்கின்றனரே! 'பொறுத்தது போதும்—பொறுக்க முடியாதினித் துயரம்' என்று அந்தக் குணவதிகள் கோபப்படச் செய்து, குடித்தனத்தைக் குட்டிச்சுவராக்குகிறார்களே!

இவைமட்டுந்தானா? இன்னும் எத்தனையோ! குடி, குடியைக் கெடுக்கும்—ஒரு தலைமுறையில் மட்டுமல்ல—பல தலைமுறைகளிலும்!

எனவே, 'குடியை விடுவீர்! கள் குடியை மறவீர்!' என்று மக்களுக்கு எடுத்துக் கூறி, 'ஆட்சிபீடமே! ஆங்கிலேயரே!—ஆகாது உங்களின் அநியாயப் போக்கு; எங்களை அடிமை கொண்டீர்கள்; அடக்கி ஆள்கிறீர்கள்; செல்வத்தைக் கொள்ளையிட்டு, உழைப்பைச் சூறையாடி, உரிமையைப் பறித்து, எங்களை ஏதுமற்ற ஏழைகளாக்கிவிட்டீர்கள்; போதாதற்கு, எங்கள் மக்களை கள் குடிக்க அனுமதிக்கிறீர்கள்; அந்த அனுமதி தர வரிப்பணம் வாங்குகிறீர்; ஏழை எளியோர், ஏற்கனவே உங்களின் அடிமைத் தளையால் அவதியுறுகின்றனர்; அந்த ஏழைகளைக் குடிக்கச் செய்து, அவர்கள் குடும்ப வாழ்வைச் சீர்குலைப்பது மட்டுமின்றி அந்தச் சீர்குலைவுப் பணிக்கு வரிப் பணமும் வாங்கும் உங்கள் அடாத செயலை நாங்கள் பொறுக்கமாட்டோம்,' என்று 'அன்றைய' காங்கிரசார் கூறி, கள்ளுக் கடை முன் மறியலும் செய்தார்கள்.

'கள் அரக்கன் ஒழிக! மதுவிலக்கு வேண்டும்,' என்று குரல் எழுப்பினர்!

நல்லறிவாளர் அத்தனை பேரும் வரவேற்றனர்—வாழ்த்தினர்—காங்கிரசாரின் குடி ஒழிப்பு குரல் கேட்டு!

ஆங்கிலேயரும் அகன்றனர் — ஆட்சியாளர்களாயினர் காங்கிரசார்!

மதுவும் விலக்கப்பட்டது—சட்டமூலமாக!

ஆனால்,......!

மதுவிலக்கு எந்த நோக்கத்திற்காக அமுல் செய்யப்பட்டதோ அந்த நோக்கம், கடந்த எட்டு ஆண்டுகளில் நிறைவேறிற்றா என்றால், 'இல்லை' என்று காங்கிரசாரே கூறுகின்றனர்.

குடிப் பழக்கம், மக்களைக் குற்றவாளிகளாக்கிவிடுகிறது.

குடிப் பழக்கத்தால், மக்கள் தங்களின் வருவாயில் பெரும் பகுதியைப் பாழ் செய்கின்றனர்—குடும்பத்தை வாட விடுகின்றனர் — குடித்தனத்தைக் குட்டிச்சுவராக்குகின்றனர் என்பனவற்றிற்கும் அப்பால், சட்டவிரோதமான தீச்செயல்கள் பலவற்றை மேற்கொள்ளவும் மனந்துணிகின்றனர்.

'குற்றம் புரிந்த பின், அதன் கொடிய விளைவுகளுக்கு தங்களின் வாழ்வையே பலி தந்துவிடுகின்றனர்,' என்று கூறி, 'எனவே, குடிப்பழக்கம் ஆகாது—கூடாது; மதுவை ஒழிப்போம்,' என்று காங்கிரஸ் ஆளவந்தார்கள் சட்டம் கொண்டுவந்தனர்.

ஆனால், 'மதுவிலக்கு வந்த பின்னர், குடிப்பழக்கத்தால் மக்கள் புரிந்துவந்த குற்றங்கள் குறைந்துவிட்டனவா' என்றால், இல்லை!

'குடிக்கக்கூடாது,' என்ற சட்டத்தை மீறுகிற முதல் குற்றத்திலிருந்து, அப்படி சட்டத்தையும் மீறிக் குடித்துவிட்டுப் புரியும் வழக்கமான குற்றங்களையும் புரிந்துகொண்டு தானிருக்கின்றனர்.

குற்றங்கள் புரிவதற்கு, மதுவிலக்கு ஒரு அடிப்படையாக வன்றோ இருக்கின்றது?

மதுவிலக்கு அமுலிலிருப்பதினால், ஏற்கனவே இருந்த குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதே ஒழிய குறைந்தபாடில்லை.

இந்த நிலையில், 'குடிப் பழக்கத்தைத் தடுக்காமலிருப்பதினால் கிடைக்கக்கூடிய கோடிக் கணக்கான ரூபாய் வருமானத்தையும் ஏன் சர்க்கார் இழக்க வேண்டும்?' — என்று, மதுவிலக்கு சட்டத்தை ரத்து செய்யக் கோருபவர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் கூறுவன அத்தனையும் தவறுடையன என்று தள்ளிவிடக்கூடியன அல்ல—சிந்தனைக்கு உரியன!

ஆந்திர மாநிலம் அமைந்ததுமே, 'மதுவிலக்குச் சட்டம் நீடிப்பதா அல்லது ரத்து செய்யப்படுவதா?'—என்ற பிரச்சினையும் எழுந்தது.

பிரச்சினையை ஆராய, திரு. எஸ். வி. ராமமூர்த்தி தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

குழு, கடந்த பிப்ரவரியில் தனது சிபாரிசுகளை வெளியிட்டது.

அந்தச் சிபாரிசுகளில் சிலவற்றை அப்போதிருந்த பிரகாசம் மந்திரிசபை தற்காலிகமாக அமுல் செய்தது.

பிரகாசம் மந்திரிசபை அமுல் செய்த சிபாரிசுகளை, இப்போதைய கோபால ரெட்டி மந்திரி சபை ரத்து செய்துவிட்டிருக்கிறது.

ஆந்திர மக்களுக்கு இது ஒரு பெரும் புதிராகவே இருக்கிறது.

'மதுவிலக்குச் சட்டத்தை அமுல் செய்வதைத் தளர்த்த வேண்டும்,' என்று விசாரணைக் குழு சிபாரிசு செய்தது.

முன்பிருந்த மந்திரி சபை—அதுவும் காங்கிரஸ் மந்திரி சபைதான் — சிபாரிசுகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்டது.

இப்போதிருக்கும் மந்திரி சபை, குழுவின் சிபாரிசுகளைக் குப்பைத் தொட்டிக்கு அனுப்பிவிட்டது; வேடிக்கையாகத் தானிருக்கிறது.

மதுவிலக்கு ஒரு நல்ல கொள்கைதான்; ஆனால், எத்தனை நல்ல கொள்கையானாலும், அந்தக் கொள்கையில், மக்கள் மனப்பூர்வமான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டுமே! அந்த நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட, அவர்கள், அந்தக் கொள்கையினைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்க வேண்டும்.

மதுவிலக்கு அமுல் பற்றி விசாரணை நடத்திக் கூறப்பட்ட சிபாரிசுகளை ஒரு மந்திரி சபை ஏற்றுக் கொள்வதும், அடுத்து வரும் அதேகட்சியைச் சேர்ந்த மற்றொரு மந்திரி சபை குப்பைத் தொட்டியில் போடுவதும் எந்த ஜனநாயக மரபுக்கு ஒத்துவரக்கூடியதோ!—நாமறியோம்!

'நம்மை அசைக்க இன்னும் ஐந்தாண்டுகளுக்கு எவராலும் முடியாது—என்ற எண்ணத்தினால்தான், கோபாலர் மந்திரி சபை இப்படிச் செய்ததோ,' என்ற கேள்வி பிறக்கிறது.

மதுவிலக்கை முதலில் அமுல் செய்வானேன்? பின் அதைச் சரிவர அமுல் நடத்த முடியாமல் திண்டாடுவானேன்?

'தொடர்ந்து அமுல் நடத்துவதா, வேண்டாமா என்று விசாரிக்கக் குழு ஏன் நியமிப்பது? — நியமித்த குழுவின் சிபாரிசுகளை ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?—அடுத்த மந்திரி சபை அதை ஏன் மாற்ற வேண்டும்?' என்பனபோன்ற சிக்கலான கேள்விகளுக்கு மதுவிலக்கில் நம்பிக்கை கொண்ட அத்தனை பேரும் விடை கண்டு பிடிக்க முயன்றாக வேண்டும்.

# 'மாணவர்கள் பின்பற்றும் வகையில் ஆசிரியர்கள் ஒழுக வேண்டும்'

## 'எதிர்கால குடிமக்களை உருவாக்கும் பொறுப்பு அவர்களுடையதே!'

கல்வித்துறை தலைவர் சுந்தரவடிவேலு அறிவுரை

தென்காசி, ஜூலை 24—

"ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் நல்லொழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்; ஏனெனில், மாணவர்கள், தங்களின் ஆசிரியர்களது வழியைத்தான் பின்பற்றுவர்;

"மாணவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; அந்தப் பொறுப்பினை அவர்கள் சரிவர நிறைவேற்ற வேண்டும்;

"ஆசிரியர்களின் 'அந்தஸ்து', அவர்களது சம்பளத்தைப் பொறுத்திருக்கவில்லை; அவர்கள் கொண்டுள்ள கடமை உணர்வைப் பொறுத்துத்தானிருக்கிறது,"

—என்று, சென்னை சர்க்கார் கல்வித் துறைத் தலைவரான என். டி. சுந்தரவடிவேலு, தென்காசி ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறினார்:—

"ஆசிரியர்கள் மாணவர்களைக் குறை கூறிக்கொண்டிப்பதற்கு மாறாக, மாணவர்கள் எந்தப் பாடங்களில் போதுமான பயிற்சி இல்லாதிருக்கிறார்களோ அந்தப் பாடங்களை, வகுப்புகளில் நடத்தியதற்குப் பிறகும், இல்லங்களிலோ அல்லது பள்ளியிலேயோ பிரத்தியேகமாகச் சொல்லித் தரவேண்டும்.

"மாணவர்கள், தங்களின் உடல் வலிமையையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், வலுவான உடல் இல்லாவிட்டால் சீரிய அறிவு பெறுவது இயலாது."

# விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் புறக்கணிக்கப்படுகின்றன!

## ஆந்திராவில் மதுவிலக்கு கடுமையாகும்

ஆந்திரா மதுவிலக்கு விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை ஆந்திர சர்க்கார் இப்போது அமுல் செய்யாது ஒழித்துவிட்டதாகவே கூறப்படுகிறது.

எஸ் வி. இராமமூர்த்தி தலைமையில், ஆந்திராவில் அமுல் செய்யப்பட்டுள்ள மதுவிலக்கு பற்றி ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு—தனது இதர சில சிபாரிசுகளுடன்—கள்ளுக்கடைகளைத் திறந்துவிடுமாறும், மதுவகைக்கான 'பெர்மிட்'டுகளை வைத்திய சோதனை சர்டிபிகேட்டுகளின்றியே வழங்குமாறும் தெரிவித்திருந்தது.

கடந்த 1954-ம் ஆண்டு பிப்ரவரியில், குழு அறிக்கையைத் தாக்கல் செய்திருந்தது.

குழுவின் அறிக்கை, நாட்டில்—குறிப்பாக காங்கிரஸ்காரர்களிடை—சட்டசபைக்கு உள்ளும் புறமும்—பலத்த கண்டனத்திற்கு ஆளாகியது.

மற்றொரு சாரார், குழுவின் சிபாரிசுகளை வரவேற்றதுடன், அவற்றை சில திருத்தங்களுடன் அமுல் செய்ய வேண்டும் என்றும் கூறாமல் இல்லை.

அப்போதிருந்த முதன் மந்திரியான டி. பிரகாசம், குழுவின் சிபாரிசுகள் பற்றி சர்க்காரின் கொள்கையை எதிர்த்து தனது சகா மந்திரிகளைச் சமாதானப் படுத்தி வைத்துக்கொண்டு, தற்காலிகமான சில உத்தரவுகளைப் பிறப்பித்துவிட்டார்; சிபாரிசுகள் பற்றி இறுதியான முடிவுகள் மேற்கொள்ளுவதை தனக்குப் பிறகு வரும் மந்திரிசபையிடம் விட்டுவிட்டார்.

'நீரா,' பதனீர் போன்றவை இறக்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கிற முறையை ரத்து செய்ததுடன், மது வகைகளுக்கு தேகநல 'சர்டிபிகேட்டு'கள் இல்லாமலேயே 'பெர்மிட்' வழங்கவும் அவர் தற்காலிகமாக உத்தரவிட்டிருந்தார்.

இந்தத் தற்காலிக உத்தரவுகளை, இப்போது, கோபால் ரெட்டி தலைமையில் உள்ள மந்திரி சபை ரத்து செய்துவிட்டதாகத் தெரிகிறது.

இதனால், இராமமூர்த்தி குழுவின் சிபாரிசுகள், குப்பைத் தொட்டியில் வீசி எறியப்பட்டுவிட்டதுடன், மதுவிலக்கு கடுமையாக அமுல் செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

# புதுவை தேர்தல் முடிவு

## கட்சிகளின் நிலை

புதுவை சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில், காங்கிரஸ், மக்கள் முன்னணியைக் காட்டிலும் அதிகமாக ஒரு இடம் பிடித்துள்ளது.

39 இடங்களுள்ள சட்டசபையில், காங்கிரஸ் 20 இடங்களைப் பெற்றிருக்கிறது.

இறுதியான கட்சிகளின் நிலை:—

| | |
|---|---|
| காங்கிரஸ் | 20 |
| மக்கள் முன்னணி | 16 |
| சுயேச்சை | 3 |
| புதுவை தேசிய காங்கிரஸ் | 0 |

புதுவை: மாவட்ட காங்கிரஸ் 8; மக்கள் முன்னணி 12; சுயேச்சை 1.

காரைக்கால்: மாவட்டக் காங்கிரஸ் 9; மக்கள் முன்னணி 2; சுயேச்சை 1.

மாஹி: காங்கிரஸ் 1; மக்கள் முன்னணி 2.

யேனம்: காங்கிரஸ் 2.

5,600 டன் ரஷ்ய உருக்கு, 'எஸ். எஸ். மௌனண்ட் கில்லினி' என்ற கப்பல் மூலம் சென்னை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

தென் இந்தியாவில் தனிப்பட்ட ஒருவரது உபயோகத்திற்கென இது தருவிக்கப்பட்டிருக்கிறதாம்!

# கழகச் செய்திகள்

## சென்னை—40-வது வட்ட தி. மு. கழகம்

23—7—55 மாலை 6 மணிக்கு சேப்பாக்கம் பார்த்தசாரதி நாயுடு தெருவில், 40-வது வட்டக் கிளைக் கழகத்தின் 2-வது ஆண்டு விழா கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அப்பாதுரையார், கண்ணதாசன், வளையாபதி முத்துகிருஷ்ணன், இளம்பரிதி, மு. பொன்னுரங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## ஆரணி தி. மு. கழகம்

17—7—55 மாலை 6½ மணிக்கு, ஆரணி தி. மு. கழக கிளைச் சார்பில், ஆரணிக்கு அடுத்த குசலம் பேட்டை கிராமத்தில், தோழர் வெற்றிவீரன் தலைமையில் ஒரு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பா. சு. மணி, உமர், நெடுமாறன், தூயமணி ஆகியோர் கழகக் கொள்கைகளையும், திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியம் பற்றியும், மும்முனைப் போராட்ட வெற்றியை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

## புலியகுளம் தி. மு. கழகம்

18—7—55 காலை 10½ மணி அளவில், 3-வது வார்டு கிளைத் தேர்தல், கழகக் கட்டிடத்தில் தோழர் ஆர். கதிர்வேலு தலைமையில் நடைபெற்றது. தோழர் க. பொன்னுலிங்கம் அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## தேனி தி. மு. கழகம்

20—7—55-ல் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 6—7—55ல் நடைபெற்ற பொதுச் செயலாளர் வரவேற்பு, மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழாக் கூட்ட வரவு-செலவு கணக்கு சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

## உசிலம்பட்டி தி.மு. கழகம்

17—7—55 காலை 9 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் பி எஸ். மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கிராமங்களுக்குச் சென்று கழகப் பிரச்சாரம் செய்வதற்கென தோழர்கள் பி. சிவக்காளை, என். ராமசாமி, உசிலைத் தம்பி, பி. எஸ் மாணிக்கம், எம். பி. பாண்டி, ப குருசாமி, வி. சுப்பிரமணியம், இரா. தேவராசன், கார்த்திகை சாமி ஆகியோரடங்கிய பிரச்சாரக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

## திருக்கோட்டியூர் தி. மு. கழகம்

17—7—55 மாலை, கழகப் பணி மனையில், தோழர் கரு. முனியாண்டி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், மாநில மாநாட்டு பங்குத் தொகையை விரைவில் சேகரித்து மாவட்டச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்றும், கழகத்திற்கென சொந்தத்தில் பணி மனை ஒன்று வாங்கவேண்டுமென்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

## முத்துப்பேட்டை தி.மு.க.

15-7-55ல், சந்திரா போட்டோ ஸ்டுடியோவில், கழகக் கூட்டம், தோழர் கி இராமானுசம் தலைமையில் நடைபெற்றபோது, மும்முனைப் போராட்ட நினைவு நாளையொட்டிய தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டதுடன், 22-6-55ல் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு - செலவுகள் சரி பார்க்கப்பட்டது.

## குத்தாம்புள்ளியில் தி. மு. கழகப் பிரச்சாரக் கூட்டம்

கேரளத்தில் தி. மு. கழகக் கொள்கைகளைப் பரப்புவதற்காகக் குத்தாம்புள்ளியில், முற்போக்குக் கழகத்தவர் சார்பில் 18—7—55ல் தோழர் எம். வரதராசன் தலைமையில் ஒரு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், பல்லடம் பொன்னுசாமி, சண்முகநாதன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் இந்திய சர்க்கார் தென்னாட்டிற்குச் செய்துள்ள துரோகத்தையும், தி. மு. கழக மும்முனைப் போராட்டங்கள் பற்றிய விளக்கம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். ஏராளமான மலையாளத் தோழர்கள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ந. நி.)

## ஏழுவனம்பட்டியில் தி. மு. கழகத் துவக்கம்

18—7—55ல் வள்ளுவர் திடலில் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் தி சுருளிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மதுரை எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், பி. பாண்டியன், ப இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர் பொ. இராசப்பன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## போல் நாய்க்கன்பேட்டை (தூத்துக்குடி) தி. மு. க.

17—7—55ல், தோழர்கள் கே. வி. கே சாமி, எம். சிவசாமி ஆகியோர் முன்னிலையில், தோழர் நவமணியைச் செயலாளராகக் கொண்ட ஒரு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## ஆத்தூர் — நரசிங்கபுரம் தி. மு. கழகம்

21—7—55ல், கழகப் பணிமனையில், தோழர் என். என். பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், மே தின விழாப் பொதுக் கூட்ட வரவு - செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், கழக மனைக்கான செலவுகளும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

## பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

கழக உறுப்பினர்களின் மாதாந்திரக் கூட்டம், தோழர் எஸ் மோகன் தலைமையில் நடைபெற்ற போது, தோழர்கள் ஏ எஸ். தாஸ், ஏ. எஸ். அன்பரசு, எஸ். பி. பெருமான் ஆகியோர் மும்முனைப் போராட்ட நாள் குறித்துச் சொற்பொழிவாற்றிய பின்னர், கழக வரவு-செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

## பம்பாய்—தாராவி தி.மு.க.

13—7—55 மாலை 8½ மணிக்கு தோழர் இரா. மா. சண்முகராசன் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், கழகக் கடிதப் போக்கு-வரத்துகள் பரிசீலனை செய்யப்பட்டபின், முக்கிய முடிவுகள் சில செய்யப்பட்டன.

## கொழும்பு கிளை தி. மு. க. (இலங்கை)

இலங்கை தி. மு க. கொழும்பு கிளையின் செயற் குழுக் கூட்டம் 10—7—55-ல் கழகப் பணிமனையில், தோழர் எம் ஐ. இராசமணி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் தோழர் தம்பித்துரை தாயகம் செல்வதால், அவரது விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் தோழர் எம். முக்தார் செயலாளராகவும், துணைச் செயலாளராகத் தோழர் வி. எஸ். முருகனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் ஏ. ஜார்ஜ், எல். ஜேம்ஸ், ஜி. தலுவத்தா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், இ. தி. மு. க. மத்தியக் கழகப் பொதுக் குழுவிற்குத் தோழர்கள் நா. பழனிநாதன், க. ஆறுமுகம் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வ.ஆ. மாவட்ட தி.மு. கழகக் கூட்டம்

### நிறைவேறிய தீர்மானங்கள்

24—7—55-ல் திருவண்ணாமலை சாதுக்கள் சத்திரத்தில், வ. ஆ. மா. தி. மு. கழகக் கூட்டம், தோழர் முல்லைசத்தி தலைமையில் நடைபெற்றது மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து 34 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்; 16 உறுப்பினர்கள் கடிதம் மூலம் ஒப்புதல் அளித்திருந்தனர்.

கூட்டத்தில், அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களைப் பாராட்டி வரவேற்றும், வ. ஆ. மா. தி. மு கழகச் சார்பில், பொதுச் செயலாளருக்கு அளித்த வரவேற்பையும், இதுவரையில் மாவட்டச் சார்பில் நடந்த செலவினங்களை ஏற்றுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் அண்ணா, அவர்களை மாவட்டச் சுற்றுப் பயணத்திற்கு அழைத்து நிதி அளிக்கத் தீர்மானித்தும், அண்ணா அவர்களை அழைக்க விரும்புகின்ற நகரசபைகள் ரூ. 200; மற்ற கழகங்கள் ரூ. 100—மாநில மாநாட்டு நிதிக்கு அளிக்க வேண்டுமென்றும், மற்ற பேரூர் கிளைக் கழகங்கள், நிதிக்கு ரூ. 50; சிற்றூர் கழகங்கள் ரூ. 20 அளிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட உறுப்பினர்களின் ஆண்டு சந்தா ரூ. 3-ஆக தீர்மானிக்கப்பட்டது.

### பொதுக்கூட்டம்

அன்று மாலை 6 மணிக்கு திருவண்ணாமலை அடுத்த கீழ்நாத்தூர் தி. மு. கழகச் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தோழர் முல்லைசத்தி தலைமை தாங்கினார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, ப. உ சண்முகம், கருத்தோவியன், போளூர் சுப்பிரமணியம், திருவண்ணாமலை, சுப்பிரமணியம், வேலூர் திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## த. நா. தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன்

23—7—55 மாலை 4 மணிக்கு, சென்னையில், மேற்படி பெடரேஷன் செயற்குழுக் கூட்டம் தோழர் ஏ. இரத்தினம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றது. தாழ்த்தப்பட்டோருக்குப் போதிய சலுகைகளை சர்க்கார் அளிக்காததால், தங்களது குறைந்த பட்ச 10 அம்சக் கோரிக்கையை சர்க்கார் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும், கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால், தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் வருகிற ஆகஸ்டுத் திங்கள் 1-ந் தேதி முதல் சட்டசபைக்கு முன் போராட்டம் நடைபெறும் என்றும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## த[illegible]வாய்புரம் தி. மு. க.

24—7—55 இரவு 8 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர் எம். என். இராமசாமியை செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# துணைப் பொதுச் செயலாளருக்கு வரவேற்பு — பாராட்டுக் கூட்டம்

22—7—55-ல், சென்னை வண்ணை கல்லறை மைதானத்தில், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில், தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்குப் பாராட்டு வழங்குமுகத்தான், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், துணைப் பொதுச் செயலாளர் அவர்களைப் பாராட்டி தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், கண்ணதாசன், தோழியர் தேசியமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில், துணைப் பொதுச் செயலாளர் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கும், பாராட்டுதல்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு அரியதோர் உரை நிகழ்த்தினார்.

சென்னை 2-வது வட்டத்தைச் சேர்ந்த தாளமுத்து - நடராசன் முன்னேற்ற மன்றம், சென்னை 2, 3, 4, 5, 8, 12, 17, 19, 42 — ஆகிய வட்டக் கிளைக் கழகங்கள், கொடுங்கையூர் தி. மு. கழகம், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகம், இராயபுரம் குறள் நெறிக் கழகம், 4-வது வட்ட இளைஞர் முன்னேற்றக் கழகம், 17-வது வட்ட சௌந்திர பாண்டியன் படிப்பகம், 19-வது வட்ட திரு வி. க மன்றம், ஆகிய மன்றங்கள் சார்பிலும், 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் சார்பிலும் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

பொதுக்கூட்டத் தலைவரான முன்னாள் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கட்கு 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் சார்பில் கைத்தறித் துண்டு ஒன்று அணிவிக்கப்பட்டது.

பொதுக் கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதிக்காக உண்டியல் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ. 14—5—6.

★

## குடந்தையில்

### துணைப் பொதுச்செயலாளர்

24—7—55 காலை குடந்தைக்கு தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் வருகை தந்தார். கழக நிர்வாகிகள் புகைவண்டி நிலையத்தில் வரவேற்றனர்.

காலை 10 மணிக்கு தவரங்குறிச்சி எஸ். ஆர். எம். ஆர். மடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், 17—7—55 கூட்ட வரவு-செலவு படிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், செயற்குழு உறுப்பினர்கள் மாதத்திற்கு ரூ. 1 சந்தாவாக அந்த மாதம் 10-ந் தேதிக்குள் தரவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகத் தோழர்கள் கடமை குறித்தும், ஆகஸ்டுப் போராட்டம் பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் உரையாற்றினார்.

மாலை 4 மணிக்கு இளைஞர் தமிழ் மன்ற இல்லத்தை துணைப் பொதுச் செயலாளர் பார்வையிட்டு மன்ற உறுப்பினர் உணர்ச்சி கண்டும், அவர்கள் ஆற்றலைப் பாராட்டியும் சென்றார்.

மாலை 6 மணிக்கு சோழபுரம் பொதுக் கூட்டத்திற்கு சென்றார். அங்கு நூற்றுக்கணக்கான பெரு மக்கள் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். நான்கு கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன; ஊர்வலம் பந்தடி மைதானம் அடைந்ததும், பொதுக்கூட்டம் தோழர் கோ. நாராயணசாமி தலைமையில் துவங்கியது. தலைவர் உரைக்குப் பின் தோழர்கள் திருச்சிற்றம்பலம், பொ தருமன், குடந்தை எஸ். ஆர். ராதா, மாயவரம் என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பின் துணைப் பொதுச் செயலாளர் பேசத் துவங்கியதும் பல்வேறு கழகங்கள் அவருக்கு மாலைகள் அணிவித்தன.

தோழர் என். வி. நடராசன், கழக வளர்ச்சியும், துவக்கமும், நம் போராட்டங்கள், சமுதாய நிலை, ஆகஸ்டு போராட்டம் ஆகிய பொருள்கள் குறித்து சொற்பொழிவாற்றினார்.

## திருமணங்கள்

★

7—7—55ல், நரசிங்கபுரம் தோழர் சின்னுசாமி — தோழியர் தனம் திருமணம் திரு. வி. அருணசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., எம். குப்புசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

15—7—55ல், தோழர் அங்கமுத்து—தோழியர் பாஞ்சாலை திருமணம் திரு. வி. அருணசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பி. எம். ரங்கசாமி, என். கே. இராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

(அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்)

## வள்ளுவர் திருநாள்

24—7—55ல், சென்னை-இராயபுரம், எண். 59, மன்னார்சாமி கோயில் தெருவிலுள்ள வட சென்னை குறள்நெறிக் கழகத்தின் சார்பில், திருவள்ளுவர் திருநாளையொட்டி, பகல் 1 மணிக்கு, சுமார் 150 ஏழைகளுக்கு அன்னமிடப் பட்டது. மாலை 6 மணிக்கு, ஆதம்சாயபு தெருவில் தோழர் கி. தியாகராசன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் எம். கே. சண்முகம் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், மேற்படி கழக உறுப்பினர் சொற்போட்டியில் தேறிய தோழர் வீரராகவனுக்கு முதற் பரிசும், தோழர் முகமது அலிக்கு இரண்டாம் பரிசும், விழாவிற்கு பெருந் தொகை திரட்டித் தந்த தோழர் சேகருக்கு குறள் புத்தகங்களும் அளிக்கப்பட்ட பின், தோழர் கன்னன் குறள் கருத்துக்களை விளக்கி உரையாற்றினார்.

பின்னர், தோழர் கண்ணதாசன், கம்ப ராமாயணம்போன்ற பிற நூல்களைக் காட்டிலும், திருக்குறள் பன்மடங்கு உயர்ந்ததெனவும், வாழ்வுக்கு குறள் ஒன்றுதான் நல்ல வழி காட்டும் எனவும், சிறப்புரை ஆற்றினார்.

பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள், மதநூல்களைக் காட்டிலும் சிறந்த நூல் என்றும், மத நூல்கள் செய்யமுடியாததை குறள் ஒன்றுதான் செய்து மக்கள் ஒன்றுபட்டு, உயர்வு—தாழ்வு அற்று, சாதி மத பேதமற்று வாழ வழி காட்டும் என்றும், பள்ளிகளிலும், நீதிமன்றங்களிலும், சட்ட மன்றங்களிலும் குறளைப் பயன்படுத்தவும், சட்ட, நீதி மன்றங்களில் குறள் மீது உறுதி மொழி கூறுதல் வேண்டுமென்றும் கூறி அரியதோர் உரையாற்றினார்.

கூட்ட இறுதியில், வள்ளுவர் விழா கொண்டாட ஓர் நாள் விடுமுறை தரவேண்டுமெனவும், பள்ளிகளில் எல்லா வகுப்புகளிலும் திருக்குறள் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மதுரை தியாகராயர் படிப்பகம்

24—7—55 காலை 11 மணிக்கு, தோழர் எம். பி. சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், படிப்பக வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

# சொந்த வீடும் — ரூ. 4,000-மும் சம்பாதித்துள்ள பிச்சைக்காரர்!

விசாரணையின்போது வெளியான ருசிகரத் தகவல்கள்

சென்னை, ஜூலை 27—

சென்னை நகரில், 1953-ம் ஆண்டு கணக்கிடப்பட்டபடி சுமார் 7,500 பிச்சைக்காரர்கள் இருக்கின்றனராம்.

இந்த ஆண்டு ஜூன் 20-ந் தேதியிலிருந்து ஜூலை 25-ந் தேதி வரை நடத்தப்பட்ட விசாரணையின்போது, சில ருசிகரமான தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

பிச்சைக்காரர் விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் பிச்சைக்காரர் ஒருவர்—சென்னையில் ஒரு சொந்த வீடும், சுமார் ரூ. 4000 அஞ்சல் நிலைய சேமிப்பும் கொண்டவராக இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

கடந்த 26 ஆண்டுக் காலமாக பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பவராம் அவர் ;— பிறவியிலேயே முடவர்!

அவர், சில கிராமப் பகுதிகளில், 'மந்திரம்' ஜெபித்த 'தாயத்து' கள்கூட சில காலம் விற்ருராம்; அப்பொழுதெல்லாம் அவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2 முதல் ரூ. 15 வரை கிடைத்து வந்ததாம்.

பிச்சைக்காரர் விடுதியிலிருப்பவர்கள் மட்டுமின்றி, தெருக்களில் உள்ள பிச்சைக்காரர்களும் இந்த விசாரணைக்குட்பட்டனராம்.

தெருக்களில் வதியும் பிச்சைக்காரர்களில் பலர், தாங்கள் தொடர்ந்து தெருக்களில் பிச்சை எடுத்தே வாழ விரும்புவதாயும், விடுதிகளில் தங்களுக்கு விருப்பமான உணவு தரப்படுவதில்லை என்றும், நடைபாதைகளில் படுத்துறங்குவதையே தாங்கள் பெரிதும் விரும்புவதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தத் தகவல்களை அறிவதற்கே பிச்சைக்காரர்களுக்குப் பணம் தர வேண்டியிருந்ததாம்.

மத்திய திட்டக் குழுவின் பிரிவான ஆராய்ச்சிக் குழுவின் சார்பில், சென்னை சமூக சேவைப் பள்ளியினர், இந்த விசாரணையை நடத்தியிருக்கின்றனர்.

இந்த விசாரணை நடத்துவதற்காக ரூ. 9,188—8—0 மானியம் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

## 'லோகியா நீக்கப்பட்டது சட்ட விரோதமானது'

ம. சோ. கட்சி மக்கள் சபை உறுப்பினர்கள் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 28—

"டாக்டர் ராம் மனோகர் லோகியாவை ம. சோ. கட்சி உறுப்பினர் பதவியினின்றும் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு விலக்கி வைத்தது சட்ட விரோதமானது; ஏனெனில், அந்த நடவடிக்கை, எந்த ஒரு சட்ட விதிக்கும் பொருந்தக் கூடியதல்ல,"

என்று, ம. சோ. கட்சியைச் சேர்ந்த போபால், மணிப்பூர், பீகார் மக்கள் சபை உறுப்பினர்கள் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"ஒரு உறுப்பினரைக் கட்சியிலிருந்து விலக்குவதற்கு முன்னர், சட்டம் கோருகிறபடி அவருக்கு 'நோட்டீஸ்' தரவேண்டும்; இந்த முறைகூட மேற்கொள்ளப்படாமல் கட்சியிலிருந்து லோகியா நீக்கப்பட்டிருக்கிருர்; எனவே, அந்த நடவடிக்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது,"

என்று, அந்த மக்கள் சபை உறுப்பினர்கள், அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

## திருவள்ளுவர் திருநாள்

★

30—7—55 மாலை 6 மணிக்கு, புதுக்கோட்டை, திருவள்ளுவர் நகரில், திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வே. ஆறுமுகம், இளஞ்சேரன் ஆகியோர் பேசுவர்.

# கொடுத்த பணம் கிடைக்காததால்!

தற்கொலை செய்து — கொண்டாராம் சாது!

ஜெய்பூர், ஜூலை 25—

பிலாஸ்பூரிலுள்ள கார்சியா எனுமிடத்தில், சாது ஒருவர், தாம் கொடுத்துவைத்திருந்த பணத்தைத் திருப்பித்தர மறுத்த ஒரு மிட்டாய்க் கடைக்காரனது கடைக்கு முன்னுல் விழுந்து இறந்துபோனதாகச் செய்தி ஒன்று வந்துள்ளது.

அந்தச் சாது, தன்னுடைய சொத்துக்களையெல்லாம் விற்றுவிட்டு கார்சியா என்ற அந்த இடத்திற்கு வந்திருந்ததாயும், அங்கு மிட்டாய்க் கடைக்காரனிடம, தாம் கையில் வைத்திருந்த ரூ. 700-ஐயும் கொடுத்துவைத்திருந்ததாயும், பின்னுள் சென்று, அந்தச் சாது மிட்டாய்க்கடைக்காரனிடம் தமது பணத்தைக் கேட்டபோது, அவர் கொடுத்த முழுத் தொகையையும்— அதாவது ரூ. 700-ஐயும் கொடுக்க மறுத்ததாகவும், எனவே ஆத்திரம் கொண்ட சாது, 'அபினி'யைச் சாப்பிட்டுவிட்டுவந்து, அவனது கடை முன்னர் படுத்துக்கொண்டு, தமது பணத்தைக் கொடுக்காவிட்டால் கடைக்கு முன்னர் விழுந்து இறந்து விடுவதாகப் 'பயமுறுத்தி'க் கொண்டிருந்ததாயும், ஆனுல், சாதுவின் இந்தச் செய்கைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் அதை வேடிக்கையாகவே கினைத்துக் கொண்டிருந்ததாயும், இறுதியில் அந்தச் சாது கீழே விழுந்து இறந்து போனதாகவும் செய்தி தரிவிக்கிறது.

# நெல்லை மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள், நெல்லை மாவட்டத்தில் 16-8-55 முதல் 21-8-55 வரையில் ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் செய்வார்.

சுற்றுப்பயணத் திட்டத்தை நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி வகுத்துப் பின்னர் விவரமாக அறிவிப்பார்.

மாநில மாநாட்டு நிதி தந்து கூட்டம் அமைத்துக்கொள்ளும் தோழர்கள், தோழர் கே. வி. கே. சாமி அவர்களோடு தொடர்புகொள்ளவும்.

'அறிவகம்' சென்னை 28–7–'55 — பொறுப்பாளர், தி.மு.க. தலைமைக் கழகம்

## அ. இ. அஞ்சல் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளருக்கு

தூத்துக்குடி நகரசபை வரவேற்பு

அகில இந்திய அஞ்சல் தொழிலாளர்கள் சங்கப் பொதுச்செயலாளர் தோழர் ஏ. எஸ். இராஜன் அவர்களுக்கு தூத்துக்குடி நகரசபை சார்பாக வரவேற்பு ஒன்று, இத் திங்கள் 29-ந் தேதி அளிக்கப்பட இருக்கிறது.

தொழிற் சங்க சரித்திரத்திலேயும், பொதுவாக நகரசபை வரவேற்பு வழங்கும் முறையிலேயும் இவ்வரவேற்பு தபால்-தந்தி தொழிலாளர்களின் தலைவருக்கு முதல் முறையாகத் தரப்படுவதாகும்.

இந்தியாவில் 1932-ம் ஆண்டில், மொத்தம் 32 சர்க்கரை ஆலைகள் வேலை செய்துவந்தன. அவற்றில் மொத்தம் 33 900 தொழிலாளர்கள் வேலை பார்த்துவந்தனர் 1953-ம் ஆண்டில் ஆலைகளின் எண்ணிக்கை 170 ஆகவும், அவற்றில் வேலை பார்த்துவந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 91,997 ஆகவும் உயர்ந்துவிட்டது.

# கோஷ்டிச் சண்டைகள் நீடித்தால்....

## 'சி' பிரிவு மாநிலங்கள் கலைக்கப்படுமாம்!

காங்கிரஸ் செயலாளர் எச்சரிக்கிருர்

சிம்லா, ஜூலை 27—

"இந்தியாவில் உள்ள 'சி' பிரிவு மாநிலங்கள் எல்லாம் கலைக்கப்பட்டுவிடலாம்; இந்த 'சி' பிரிவு மாநிலங்களில் எல்லாம் 'கோஷ்டி'ச் சண்டைகள் மலிந்துவிட்டன; மக்களுக்கு, இந்த மாநிலங்கள், எந்த வகையாலும் சேவை செய்ய முடியவில்லை; இதற்கு உதாரணமாக டில்லி, போபால், அஜ்மீர், இமாசலப் பிரதேசம் முதலியனவற்றைக் கூறலாம்; எனவே, இந்த மாநில எல்லைகளைக் கலைத்துவிடுவது நல்லது என காங்கிரஸ் மேலிடம் கருதுகிறது,"

என்று, அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன் நாராயண், இமாசலப் பிரதேச காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாகச் சொல்லப்படுவதாவது :—

"'சி' பிரிவு மாநிலங்களில் இந்த நிலைகள் நீடிக்குமானுல், அந்த மாநிலங்களில் உள்ள சட்ட சபைகளைக் கலைத்துவிட்டு, குடிமரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்துமாறு, குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்ய காங்கிரஸ் மேலிடம் தயங்காது.

"மாவட்ட காங்கிரஸ் கிளையைக் கைப்பற்றி தனக்குள் வைத்துக்கொண்டு, அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடலாம்—என்று எண்ணும் பதவி வெறி பிடித்தவர்கள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்;

"எந்த ஒரு வட்டத்தில் 'தகராறுகள்' இருக்கின்றனவோ அந்த வட்டத்திலிருந்து, தேர்தலுக்கான அபேட்சகர்களை அனுப்பும் பிரதேச, மாவட்டக் காங்கிரஸ் கிளைகளின் சிபாரிசுகளை காங்கிரஸ் மேலிடம் ஏற்றுக்கொள்ளாது; மேலிடத்தார், அப்படித் தகராறுகள் உள்ள வட்டத்திற்கு தங்களின் பிரதிநிதியை அனுப்பி, தகுதியான அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்வர்;

"இமாசலப் பிரதேச மந்திரி சபையில் கடுமையான விளைவுகள், வேறுபாடுகள் இருக்கின்றன; இதைப் போலவே இன்னும் பல மாநிலங்களிலும் உள்ளன; இந்த மாதிரி விளைவுகளுக்கெல்லாம் காங்கிரஸ் தலைமைப்பீடம் ஒட்டுப் போட்டுக் கொண்டிருப்பதல்ல வேலை; இன்னும் எத்தனையோ ஆக்க வேலைகளிருக்கின்றன," என்றும் காங்கிரஸ் செயலாளர் குறிப்பிட்டிருக்கிருர்.

# கழகக் கூட்டம்

★

சென்னை (சைதாப்பேட்டை) தேரடி மைதானத்தில் 30—7—55 மாலை 6½ மணிக்கு

தலைவர் : செங்குட்டுவன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

கண்ணதாசன்

## க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜூலை 29: சிவகங்கை

30: புதுக்கோட்டை

31: திருச்சி

# கொடி கொளுத்தும் கிளர்ச்சி

சர்க்காரின் நிலை?

சென்னை, ஜூலை 27—

திராவிட கழகத்தினர், வரும் ஆகஸ்டு முதல் தேதியன்று நடத்தவிருக்கும் கொடி கொளுத்தும் கிளர்ச்சியின்போது, எந்தவிதமான நடவடிக்கை மேற்கொள்ளுவது என்பது குறித்து முதன் மந்திரி காமராசர், டெல்லியிலிருந்து சென்னை திரும்பியதும் முடிவு எடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

கிளர்ச்சியின்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது குறித்து சர்க்கார் அதிகாரிகள் விவாதித்து இரண்டு மூன்று வழிகளைக் கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

முதன் மந்திரி வந்ததும், முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் அனுப்பப்படும் என்றும் தெரிகிறது.

★

## வேண்டுகோள்

"குறிப்பாக தங்களைப் பற்றியும் தங்களின் இலட்சியம் பற்றியும் வட நாட்டில் பிரச்சாரம் செய்யும் பணியினை நான்மேற்கொண்டிருப்பவன்;

"திராவிட சமதர்மக் குடியரசு மலரவேண்டுமென்பதை இலட்சியமாகக் கொண்ட திராவிடர் இயக்கத்தின் தலைவர்களைப் பற்றியும், அவர்களின் நடவடிக்கைகளைப் பற்றியும் வடநாட்டில் உள்ள ஆங்கில இந்திப் பத்திரிகைகளில் திட்டவட்டமான செய்திகளை வெளியிடச் செய்திருக்கிறேன்;

"திராவிடர் இயக்கத்தவர், இந்தி வெறியர்களின் போக்கைக் கண்டிக்கும் வன்மை குறித்தும், அதற்கு மக்களிடமுள்ள ஆதரவு குறித்தும் வடநாட்டவர் உணர்ந்துகொள்ள உதவியிருக்கிறேன்;

"நான் கழகங்களில் எதிலும் உறுப்பினனுக இருக்கவில்லை; ஆனுல், கழகங்களின் இலட்சியமான திராவிட சமதர்மக் குடியரசு அமைப்பதற்காகவும், இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகவும் என்னுல் முடிந்த சிறிய அளவு சேவையைச் செய்திருக்கிறேன்—தொடர்ந்து செய்ய விரும்புகிறேன்;

"இந்த நிலையில் உள்ள நான், பெருந்தலைவரான உங்களுக்கு, ஒரு நாட்டின் கொடி பற்றி எதுவும் கூறத்தேவையில்லை என்று கருதுகிறேன்;

"ஒரு நாட்டின் பெருமைக்குரிய கொடியை எரிப்பது அல்ல—அவமதிப்பதே குற்றமாகும்; அதை எரிப்பது மிகப் பெரிய குற்றம்—தேசத் துரோகக் குற்றமாகும்; எனவே, தாங்கள், இந்தக் கொடி எரிக்கும் முயற்சியைக் கைவிடக் கோருகிறேன்,"

என்று, 'யூனிவர்சல் பிரஸ் சர்வீஸ்' நிர்வாக ஆசிரியரான எம். பி இராதாகிருஷ்ணன் என்பவர், பெரியாருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

# ரூ. 8000 மதிப்பில் 250 வீடுகள் கட்டப்படும்

சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கு இந்திய சர்க்கார் கடன்

சென்னை, ஜூலை 26—

மத்திய தர வகுப்பாரில் கீழ்நிலையிலிருப்போருக்கு விற்பனை செய்வதற்கென ரூ. 8,000 பெறுமான வீடுகள் கட்டுவதற்காக சென்னை நகர அபிவிருத்தி 'டிரஸ்டு'க்கு ரூ. 20 லட்சம் கடன் வழங்க மத்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தமாதிரி வீடுகள் சுமார் 250 கட்ட நகர அபிவிருத்தி டிரஸ்டு தீர்மானித்திருக்கிறதாம்.

இந்த வீடுகளை, 'டிரஸ்டு' ஏற்கனவே வாங்கியுள்ள இடங்களில் அமைக்குமாம். அதன் மூலம், இடம் வாங்குவதில் போடப்பட்ட டிரஸ்டின் நிதி மீண்டும் கைக்கு வந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

அடுத்த ஏப்ரலுக்குள் கட்டி முடித்துவிட திட்டமிடப்பட்டிருக்கும் இந்த வீடுகள் தயாராகிவிட்டதும், அதே காலத்தில், ஆந்திர சர்க்கார் அலுவலகங்கள் சில சென்னையிலிருந்து ஆந்திராவுக்கு மாற்றப்பட்டதும் மத்தியதர வர்க்கத்தினரின் வீட்டு கஷ்டம் ஓரளவு குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

# கிராமங்களுக்கு மின்சார வசதி

ஜூன் மாதத்தில், கீழ்க்கண்ட கிராமங்களில் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது :—

செங்கற்பட்டு மாவட்டம் : செருகம்பாக்கம், பெரியப்பனமச்சேரி, தண்டலம்.

கோவை மாவட்டம் : சோகமூப்பன்புதூர், கொளத்துப்பாளையம், மங்கலக்கரை.

மதுரை மாவட்டம் : அய்யம்பாளையம், காரைகுட்டம், கருப்பட்டி, குள்ளப்பட்டி, உரப்பனூர், வாழப்பட்டி.

வடஆற்காடு மாவட்டம் : அசாம், அணைக்கரை, எட்டபாளையம், கோவிந்தசேரி, களாகாபுரம், கலவைபுதூர், மல்லிகாபுரம், திருமலச்சேரி, வாங்கூர்.

இராமநாதபுரம் மாவட்டம் : சுந்தர பாண்டியம்.

திருநெல்வேலி மாவட்டம் : அணைகுளம், பாலகிருஷ்ணபுரம், தளபதி சமுத்திரம், நம்பிதளவான்பட்டலம், புளியங்குறிச்சி, ராஜகல்மங்களம், திருக்குறுங்குடி,

# ஈராக்கில் பிரபல கம்யூனிஸ்டுகள் கைது

ஈராக் பிரபல கம்யூனிஸ்டுகள் 13 பேர்களை ஒரு ஓட்டலில் போலீசார் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

முக்கியமான தஸ்தாவேஜுகள், பிரசாரப் பிரசுரங்கள் மற்றும் கட்சியின் கடிதப் போக்குவரத்துகள் முதலியனவற்றையும் போலீசார் பறிமுதல் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

அடுத்த வாரத்தில் நான்கு நாட்கள் நடைபெறவிருக்கும் முஸ்லீம் விழாக்களின்போது, சட்ட விரோதமான ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் செய்ய கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாக, புலன் விசாரணையின்போது தெரிய வந்ததாகவும், அதை ஒட்டியே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவென்றும் போலீசார் கூறினராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ